ஓலை 129| ஓசை 252| ஜூலை 2025

# அகர முதல இலக்கியப் பேரவை







## பரிதிமாற் கலைஞர்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை.

## பொருள்

பிறர் வருந்துமாறு செய்து பெற்ற பொருள் எல்லாம்
பெற்றவன் வருந்துமாறு செய்து போய்விடும்.
நல்வழியில் வந்தவை இழக்கப்பட்டாலும்
பிறகு பயன் தரும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


**அகர முதல இலக்கியப் பேரவை**


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை!

பாவகை : வஞ்சித் தாழிசை:




கன்னலினைச் சுமந்தாலும்
கன்னலின்தன் சுவையின்றேல்
என்னமண்ணோ என்றிடுவர்;
கன்னலைப்போல் நிற்கவேண்டும்.

மின்னலினைச் சுமந்தபோதும்
இன்னமுதாம் மழைப்பொழிய
எண்ணமறத் தல்போன்று
எண்ணத்தில் மறக்கலாமா?




கற்றவர்கள் கற்றபடி
நிற்றலின்றேல் கற்றறிந்தும்
கற்றறியா குருடராவார்
கற்றபடி நிற்றலேசீர்!

இலக்கணக் குறிப்பு:

ஒரு பொருள் மேல் குறளடி நான்கு மூன்றடுக்குகளாய் வருவது வஞ்சித்தாழிசை. ஒவ்வொரு அடியிலும் முதல் சீரின் மூன்றெழுத்துகளும் நான்கடியிலும் ஒன்றி வரும். மூன்றடுக்கின்றி தனித்து வராது. நான்கடிகளுக்கும் எதுகை மோனை மாறாது. ஒவ்வொரு சீரும் காய்ச் சீர்களாகவே வரும். காண்பதற்கு நான்கு அரையடிக் கொண்ட கலிமண்டிலம் போலவே இருக்கும். இருசீர் அடியானதால் ஒவ்வோரடியின் இரண்டாம் சீரில் மோனை வர வாய்ப்பில்லை.

# அன்பும் அறிவும்

பாவகை : குறள்வெண்பா



1. அன்பொன்றே நாளும் அகிலத்தை ஆளுமே
   என்றும் அறிவையும் ஏல்.

2. அறிவால் பெருகுமே அன்புடன் ஆக்கமும்
   அறிவால் உயர்வை அறி.

3. அஞ்சுதலைப் போக்கவே அன்பைப் பெருக்கியே
   அஞ்சாமல் வாழ்தல் அறிவு..

4. அறவழி சென்றிட அன்பே துணையாம்
   மறத்தையும் போற்றலே மன்.

5. அன்பை நிறைத்தே அறிவுடன் வாழ்வோர்க்கே
   என்றுமே இல்லையே ஏதம்.

6. அன்பை நிறைத்தே அறிவைப் பெருக்கியே
   இன்பமாய் வாழ்தல் இதம்.

7. அறிவோ உயர்ந்தோரின் அன்பையும் ஈர்க்கும்
   அறிவால் உயர்வாய் அறி.

8. அன்பால் உலகை அடக்கி அறிவாலே
   என்றும் பெறுவாயே ஏற்றம்.

9. அன்பும் அறிவும் அடக்க நடத்தையும்
   இன்னல் அகற்றும் இணி.

10. அன்பெனும் ஊற்றால் அறிவை வளர்த்திடக்
    கன்றியேத் தீரும் கலி.

கவிஞர் செ. கலைவாணி

# நலம் புனைந்துரைத்தல்

## அதிகாரம் : 112



முகந்ததும்வாடும் அனிச்சமே
உன்மென்மை வாழ்க.
அகம்விரும்பும் காதலியோ
உனைவிட மென்மையானவளே.

காதலியின் விழிகளொத்த
குவளைமலர்களென நினைந்து.
ஒத்தமலர்களைக் கண்டால்
மயங்குவதேனோ நெஞ்சமே.

மூங்கிலையொத்த புயமுடைய
காதலியின்மேனியோ தளிராம்.
பற்களோமுத்து மணமோஇயற்கை
மையுண்டகண்களோ வேலாயுமுள்ளதே.

குவளைமலர்களுக்கு விழியிருந்திடின்
கன்னியிவள் கண்கள்கண்டு.
இதற்குயாம் ஒப்பாமோவென
நாணித் தலைகவிழுமே.

காதலி தன்னிடைதனைகண்கூடாது
காம்புகிள்ளா அனிச்சமதை.
கூந்தலில்சூட காம்பின்சுமைதாளாது
இவளிடை ஒடிந்துபோமே.

காதலியிவள் வதனத்திற்கும்
முழுமதிக்கும் மாறுகாணவியலாது.
தலைகிறங்கி தமக்குள்ளே
கலங்குகின்றனவே விண்மீன்களே.

தினம்தேய்ந்து வளர்ந்து
முழுமதியாகும் திங்களின்.
களங்கம்போல் இந்நங்கையின்
வதனத்திலேதும் களங்கமில்லையே.

நிலவேநீ பிறையாகாது
களங்கமுமில்லாது இளநங்கைபோல்.
ஒளிவீசவியலுமெனில் இவள்போல்
நீயுமென் காதலியாவாய்.

குவளைமலருக்கொத்த விழியுடைய
இளநங்கை இவள்போலிருக்க.
திங்களேநீ விரும்பிடின்
இனியும் பலர்காணதோன்றாதிரு.

அனிச்சமலரும் அன்னத்தினிறகும்
இளமங்கை இவளின்.
மென்பாத அடிகளுக்கு
நெருஞ்சிமுள்ளாகி வருத்துமே!

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# வதம்

உன் மௌனம் கொண்டு
என் இதயத்தை
கூறு போடுகிறாய்.

அதில் சேதாரமுமின்றி
தப்பித்துக்கொள்கிறது
காற்று.

விழித்தேசத்தின்
ராணியாய் வலம் வருகிறது
உன் வேல்விழிப் பார்வை.

நீ எப்போதும்
காதலில்... முதல்பலி
வாங்கிக் கொள்(ல்)கிறாய்
என்னை.

திருத்தி எழுதுகிறேன் தீர்ப்பை.
இம்முறை நீ பலியாகு.

சிறிதும் சலிப்பின்றி
உன் உயிரின்
ஆணிவேர் வரைத்
தொட்டுத் தொட்டு
கொள்ளைக் கொள்ளையாய்
உன்னை
காதல் செய்கிறேன்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# விருந்தோம்பல் மறவாய்

முன்னருமே அறிந்திடாத மாந்தர்க் குதவல்
முனைப்பாகச் செய்தாலே விருந்தோம் பலாகும் !
அன்பினாலே வீடுதோறும் திண்ணை உண்டாம் ;
அயர்ந்திட்ட வழிப்போக்கர் உறங்க நன்றாம் !
பின்னாளில் வாழ்க்கைமுறை மாறிப் போக
பெருமைபெறும் சுற்றத்தார் விருந்தாய் ஆனார் !
பொன்படைத்த உறவினர்க்கே இருகை வணக்கம்
போக்கற்றார் எனில்பூக்கா முறுவல் மட்டும் !


கொண்டவனின் உடன்பிறந்தார் மாண்பி லாரா ?
குடும்பநண்பர் வந்திட்டால் முனகல் பேச்சா !
உண்ணும் போழ் தில்வந்தார் இறைவன் அறிவாய் ;
உறைந்தருளும் தன்மையிலே ஆசி கொள்வாய் !
கண்ணுற்றே உதவிபல செய்வார் எல்லாம்
கண்கண்ட தெய்வமென வாழ்த்தப் படுவார் !
புண்படுத்தும் சொல்லுமிழ்வார் நல்லோர் நெஞ்சில்
புன்மையினர் என்றிகழ்ந்தே தூற்றப் படுவார் !



எதிர்ப்படுவோர் நலம் கேட்கின் மகிழ்ச்சி வருமே ;
இன்முகத்தில் சிரிப்புவர காசா பணமா !
அதிகமில்லை பாராட்ட ஒரு சொல் போதும் ;
அணைத்திடுவார் இருகையும் கண்ணீர் துடைக்கும் !
கதியற்றவர் பசிதீர்க்கின் தெய்வம் நீயே ;
கண்கண்ட தெய்வமாய் வணங்கு வாரே !
விதி செய்யும் இருவினையும் நீக்கல் எளிதே ;
வேதனையார் குறைதீர்ப்பின் விலகும் வினையே !

கவிஞர் ஆச கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# அணைக்கட்டு



பாயும் ஆற்றின்
படுக்கையை பிடுங்கி
கொண்டு
சொந்த வீட்டையும்
உறவுகளின் கூட்டையும்
தெப்பமாக்கி விட்டானே!
நீர்த்தேக்கத்தில்
மலைகளை பிளந்து
மலை மலையாய்
குவிக்கின்றான்
மண்ணும் பாறைகளும்
ஓடும் நீரை உயர்த்த
ஆற்றின் அடியில்
அடைக்கலம் கொள்கிறது
ஆணிவேர் கொண்டொரு
அணைக்கட்டு.
இரவிலும் சூரியன் கொண்டு
உறங்காது உழைக்கின்றன
இயந்திரங்கள் !
புதுமையான இந்த
புதிருக்காகவா
ஆண்டொன்றுக்கு
அரைவாசி நிலம்
தற்கொலை
செய்து கொள்கிறதோ!
நீர் உயர்ந்த பின்
ஊரையும் கொன்றுவிடுமோ!
உரு தெரியாமல்

கவிஞர் திருமதி மோகன், நாவலப்பிட்டி (இலங்கை)

# ஆசான்

ஒரு மாணவன் படிப்பதற்கும்
நல்ல நிலையை அடைவதற்கும்
காரணம் ஒரு ஆசிரியராகவே
இருக்க கூடும்.
தன் குழந்தை போல்
பேணி காத்து வரும்
ஆசானுக்கு நிகரேயில்லை.
மாணவர்களை வழி நடத்துவதிலும்
ஆளுமைப்படுத்துவதிலும்
அமைதி நேர்மை என பல
குணங்களை கற்று கொடுப்பதும் ஆசானே!
மாணவ சமுதாயத்திற்கு
வழி வகுத்து கொடுப்பதிலும்
நேர் வழியில் நடப்பதிலும்
மிக முக்கிய பங்கு
ஆசானுக்கே உள்ளது.
ஆசிரியர்களின் நிழலிலே
மாணவர்களின் எதிர்காலம்
சிறந்த ஆசான் கிடைப்பது
எல்லாம் வரமே!



கவிஞர் மோனிஷா

# பெண்ணின் பெருமை



பன்முகத் தன்மையில் பதுமை
பெண்கல்வி தேவையென முழங்கினார் பாரதி
பெண்தோல்வி நீங்கிடவே வழங்கினார் சமநீதி
அணுவைத் துளைத்தேழ் கடலைப்புகட்டினார் அவ்வை
ஆணுக்கு சளைப்பின்றி பொறியாளராய் செவ்வை
மகப்பேறு மட்டும் மங்கையின் பணியல்ல
மகத்தான பணியும் எங்களுக்கு அணியே
பொரியலும் செய்யத் தெரிந்தவள் தெரிவை
பொறியாளராயும் திகழ்பவள் எனத் தெரியவை
போருக்கு ஆணை அனுப்பினாள் வீரமங்கை
போர்க்களத்தில் தானே இறங்கினாள் நவீனநங்கை
மனையுறை மகளிராய் அடிமையாய் அன்று.
வினைதேடி ஓடி திரவியம் சேர்க்கிறாளின்று
முளிதயிர் பிசைந்த மெல்லிய விரலாள்
பலியாய் உயிரெடுக்கிறாள் போர்க்களத்தில் திரளாய்
சாமானிய மகளாக பெண்ணைக் கருதாதீர்
விமானியாக விண்ணில் பறக்கிறாள் பெருமிதமாய்
பூமியில் பிறந்தவள் நிலவில் சிரிக்கிறாள்
நட்சத்திரம் பார்த்து ரசித்த பூமகள்
இலட்சியமாய் நிலவில் இறங்கிய நிலாமகள்
படைப்புக் கடவுள் நான்முகன் வியந்தான்
படைபலப் பெண்மையின் பன்முகத்தால் பயந்தான்
ஆதிசத்தியம் அவளே
அதிசக்தியும் இவளே
பெண்ணிற் பெருந்தக்க என்றும் யாருள?
பெண்ணின் பெருமைகளைப் போற்றுவோம் பாரிலே.

கவிஞர் ஸ்ரீ. ஜெயந்தி, சிதம்பரம்

# இமைகளின் இன்னிசை

நான் நதியைப் பார்த்ததில்லை.
உன் விழிக்கடலே போதும்!

நான் காற்றைப் பார்த்ததில்லை.
உன் மூச்சுக் காற்றில் வாழ்வதால்!

நான் வான் மழை பார்த்ததில்லை.
உன் காதல் மழையில் நனைவதால்!

நான் ஓவியம் பார்த்ததில்லை.
சித்தன்ன ஓவியமே
என்னைச் சிறை பிடித்ததால்!

நான் தென்றலைப் பார்த்ததில்லை.
உன் முந்தானைச் சேலையில்
முகம் துடைப்பதால்!

நான் சந்தனத்தை பார்த்ததில்லை.
உருகாத சந்தனச்சிலையோடு
காதலில் நனைவதால்!

இமைகளின் இன்னிசையில்
இதயப் புத்தகம் திறக்கும்போது
இதழ்களின் மின்சாரம்
வசந்த கீதம் இசைக்கிறது!



கவிஞர் யாழிசைச்செல்வா, தேனி மாவட்டம்

அவளுக்காக நான் எனக்காக அவள்
இருவரும் உயிர்மூச்சாய் வாழ்ந்து வந்தோம்
பார்த்த நாளில் காதல் கொண்டேன்
அவளில்லா வாழ்வு எனக்கு ஏது!

எண்ணற்ற காதல் பாடல் எழுதினாலும்
தமிழ் என்ற மூன்றெழுத்தில் பிறந்தது
எனது காதல் கண் மூடித்தனமாக
காகிதத்தில் எழுதி நினைவாக வைத்தேன் !

நாணம் கொண்டாலும் நிமிர்ந்து நின்றாள்
இதயத்தோடு இதயம் பேசி மகிழ்ந்தாள்
கண்களும் காதல் கொள்ள நானும்
அவளும் கொஞ்சி பேசி விளையாடினோம் !

எங்கு சென்றாலும் இணைந்தே செல்வோம்
எனது பாதி என்றாலும் நித்திரையிலும்
நினைக்காத நாள் ஒன்றும் இல்லை
நினைவுகளை சுமந்து வாழ்ந்து வருகிறேன் !

கற்பனையில் கனவுகள் பல கண்டு
இதழ்களோடு இதழ் பேசிய நொடியில்
அவளை அணைத்து முத்தமிட்டு போது
பேசினாள் என்னோடு முதல் வார்த்தை!

எனக்காகவே வாழ்ந்து காலமெல்லாம் சுமந்து
அழியாத காலச்சுவடாய் காவியக் காதலாய்
என்னை இயற்றி பாடல்கள் புனைந்தாய்
உயிரே எனது ஆருயிரே நீதானே!



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# பருவநிலை



மனிதனின் பேராசையால்
பருவநிலை பரிதாபத்தின்
பக்கங்களாய்

பூமிப்பந்தின் முகமான இயற்கையை
அழித்து மரங்களின் மார்பை
தினந்தோறும் கிழித்து

காடுகளின் அடையாளங்களை
இறக்கமே இல்லாமல்
சிதைத்து

அரசியல் அதிகாரத்தின்
அகம்பாவத்தில் நீர்நிலைகளை
தின்று

மனிதர்கள் ஆடும் ஆட்டத்தில்
காலநிலை தடம் புரண்டு
தடுமாற்றமாய்

பருவநிலையின் மாற்றத்தால்
எதிர்கால தலைமுறை
வெப்பத்தின் போர்வைகளாய்

மனிதனின் இயற்கை
சீண்டுதலால் வருங்காலங்கள்
வறுமை கோடுகளாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# என்னிடம் கண்ணீர் இல்லை

என்னிடம் கண்ணீர் இல்லை
எரிந்துவிட்ட புன்னகை மிதலை
உள்ளம் காய்ந்த கனல் நிலத்திலே
என்னிடம் கண்ணீர் இல்லை.

சொல்ல முடியாத வலி வளர்கிறது
சுழலில் மயங்கும் மூச்சு கதிர்கிறது
பொழிக முடியாத பனி கண்ணில்
சொல்ல முடியாத வலி வளர்கிறது.

அழக்க முடியாத கோபம் கசிகிறது
அழகில் மறைந்த கருப்பு சாயம்
அறிந்தேன், இதயத்தின் ஓர சிதைவு
அழக்க முடியாத கோபம் கசிகிறது.

நீரில்லா நதியைப் போலவே
நினைவுகள் ஓடி காய்ந்த களியோசை
சாயமில்லாத கலக்கம் மட்டும்
நீரில்லா நதியைப் போலவே.

என்னிடம் கண்ணீர் இல்லை
எல்லாம் கரைந்த பின்
காணும் வெளிச்சத்தின் உண்மை
எனது மௌனமே
என் கண்ணீரின் கடைசி மொழி.



கவிஞர் ம. ஹரிஷ், பாலூர் (செங்கல்பட்டு மாவட்டம்)

# ஓயாத மாயினி

நள்ளிரவுதான்
தலை சாய்க்கும்
வேளை அவளுக்கு
கண்களை மூட
மண்டைக்குள்
ஓடிக்கொண்டிருக்கிறது
பாராயணம்

மூளையின்
இடுக்குகளுக்குள்ளிருந்து
நாளைய வேலையின்
அடுக்குகளை
அது தோண்டிக்கொண்டிருந்தது

ஓயாத மாயினி அவளே!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# சந்திப்போமா இன்று சந்திப்போமா?

சிக்கிய பின்
சிந்தனை விழிக்கிறதே

தூண்டிலில் தான்
மீன் சிக்குமாமே

மீனின் விரிப்பில்
மாட்டியதோ மீளாமலே

மயக்கம் தந்த
மங்கையின் கண்களில்

வசீகரம் பூசியதாரோ?
வச்சிரம் தந்ததாரோ?

பார்வைகளின் சங்கமத்தில்
பதில் கிடையாதோ?

பகீரென்ற இமையசைவிற்கு
பகல்களை பங்கிடலாமோ?

எக்கணமும் சந்திப்போமா
இன்று சிந்திப்போமா ?



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# பாடிவா வானம்பாடியே!



வண்ணக்கவி பாடிவா
வானம்பாடியே
பைந்தமிழ் சொல்லெடுத்து
பாவொன்று புனைகிறேன்

நற்றமிழ் பயின்று
நங்கைதனைப் பாடுகிறேன்
நளினமான நர்த்தகியே
நாணத்தில் வீழ்ந்தாயோ

நாணலாய் வளைந்து
நர்த்தனமாடும் வஞ்சியே
நாட்டியத்தில் மயங்கி
நானும் வசியமானேன்

வசமானேன் உன்னிடமே
வாசனையில் கலந்தேன்
பருவமும் சிலிர்த்திட
பாவையிடம் வீழ்ந்தேன்

எண்ணத்தில் கலந்தே
என்னுள் நுழைந்தாயே
உன்னிளமையும் ஈர்த்திட
உறவாகிடத் துடித்தேன்

இளந்தென்றல் தாலாட்ட
இதயமும் இதமானதே
அன்பான காதலியே
ஆருயிர் தேவதையே

ஊஞ்சலாடும் மனதில்
உற்சாத்தின் பிரவாகமே
கனிவானேன் காரிகையே
காந்தமான பார்வைதனில்

எழிலான ஏந்திழையால்
ஏகாந்தமது விலகியதே
விண்ணில் பறந்தே
விந்தைகள் புரிகிறாய்

பாவரசியே வண்ணக்கவி
பாடிவா வானம்பாடியே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# பற்றின்றியும் சில காலங்கள்

மாற்றங்களோ
ஏமாற்றங்களோ
அப்படியே ஏற்றுக்கொள்கிறேன்

இதுவும் கடந்துபோகும்
என்று தேற்றிக்கொள்கிறேன்

எளிதாக
எதனையும் கடந்து விடுகிறேன்

எதன் மீதும்
பெரிதாக நாட்டமில்லை

அதனால்
எனக்கு எந்த நட்டமும் இல்லை

சிறு புன்னகையுடன்
நகர்ந்து செல்கிறேன்

எதன் மீதும் பற்றின்றி
எவர் மீதும் பிடிப்பின்றி
நாட்களைக்கழிக்கும் இந்த மனநிலையும்
சிலருக்கு சிலகாலமாவது வந்துவிடுகிறது
அவர்களுக்கு அது பிடித்தும் போகிறது
எனக்கும் அப்படியே.



கவிஞர் முனைவர். இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# உலகை மாற்றும் பெற்றோரின் பாதைகள்



உலகில் சிறந்த உத்தம ஆசானாய்
பலவும் கற்ற பன்முக திறனாளனே
திறமையில் சிறந்த திருப்புதல் தந்தே
நிறமாய் வளர்த்த நிம்மதி பெருமகனே

கோவிலில் சிறந்த கோமான் நீரே
நாவால் வாழ்த்தினால் நாவுமே போதாதே
உதிரியான திறமையில் உளமும் குறைவே
கதிராய் வீசவே கரைந்தே ஒடிந்தாயே

வெம்மை தணிக்க வெந்தாய் வெய்யிலில்
எம்மை வளர்க்கவே எடுத்தீரே துயரை
பாலைக் கனிந்து பாசமாக ஊட்டி
தோலை சுருக்கிய தோழனும் பெற்றோரே

சுமையும் சுகமானதே சுமையான உலகிலே
இமை விடாமல் இழந்தீரே உம்சுகத்தையே
நேர்மை வாழ்வை நிலையாய் கொண்டே
தார்மீக பணியில் தன்னலம் போக்கியே

பெற்றவரை துதிக்கா பெரியோர் யாரும்
மற்றோர் மதிப்பில் மண்ணில் தாழ்ந்தோரே
மனைவி சொல்லால் மயங்கி வீழ்வோரும்
வினையாய் அனுபவிப்பார் விருந்தாய் நாட்களில்

கட்டும் துணியாய் கனிந்து வளர்த்தே
விட்டே விலகாமல் விருந்தாக கவனித்தாய்
தொட்டில் பிள்ளையென தொட்டிலில் ஆட்டியே
நாட்டில் சிறக்க நல்லதொரு நாவலே

எதிர்கால வாழ்வின் எழுத்தின் வழியே
புதிராய் திகழ்ந்த புத்தக வடிவே
பிறப்பின் மகத்துவம் பிறவியில் தந்தே
உறவின் உன்னதம் உயிரில் தந்தீரே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# வர(ன்)ம் சாபமாகியதோ?

கண்களால் கலந்து
மனதால் இணைந்த
மணம் எனும் பந்தம்
பணம் எனும் பேயால்
பழுதாகிப் போகிறதே
குணநலன் புறந்தள்ளி
வசதிகளேப் பிரதனமாய்
வருவாய் ஈட்ட சுலபமாக
வரனிடம் வரும்படியாக
வரதட்சணை என்று
வாங்கும் ஆண் ஒருபுறம்.
அன்பே உருவான வரன்
அருமை புறந்தள்ளி
அடுத்த காதலுக்காக
அஞ்சாது கொல்லும்
அணங்குகள் மறுபுறம்.
ஆயிரங்காலத்து பயிர்
அநியாயமாகக் கருகி
அழிந்து போகிறதே
திருமணம் என்பதே
திக்திக் திகிலாகிவிட்டதே
திருந்திடுமோ சமுகம்?



கவிஞர் ஷீலாதேவி அருணாச்சலம், நாகர்கோயில்

# அவள் யாரவள்?



காவலன் -நான் நித்திரையில்
பத்திரமாய் நிலைத்திருந்த வேளை.

கன்னியவள் -என் மனத்திரையில்
சித்திரமாய் பூத்திருந்தாள்.

அவள் கண்ணிரண்டில் கண்டேன்
பிறை பன்னிரண்டின் தோற்றம்.

அவள் புன்னகையில் கொண்டாள்
பல பொன்னகை மின் ஏற்றம்!

வஞ்சியவள் சில்லறை சிரிப்பால்
எந்தன் சிந்தனைகள் சிதறடித்தாள்.

பாவையவள் மின்னல் பார்வையால்
எந்தன் இதய யன்னலை
தூசு தட்டி காணல் நீரால்
சலவை செய்தாள்.

நந்தவனப் பூக்களை ஸ்பரிசம் செய்த
பாலைவன பட்டாம்பூச்சியவள்
ஊமை விழிகளால்
எந்தன் உணர்வுகளை ஸ்பரிசித்து
பாதியிரவில் தூக்கம் கலைத்தாள்.

கவிஞர் நபீல் இஸ்மாயில், நமடகஹவத்த கலேவெல

# பொய்க்கால்(த) குதிரை



ஆயிரம் ஆசை வைச்சேன் மனசுல - என்
அதிர்ஷ்டம் எல்லாம் தீக்குச்சியின் நடுவில
வண்ண வண்ணக் கோலமிட்டேன் மனசுல - என்
கிரகம் எல்லாம் இந்த வெடிமருந்து பிடியில

ஒருவேளைச் சோறேனும் கூழேனும்
அதை உடல் அலுத்துக் குடிக்கத்தான் மனம் ஏங்குது.
பிச்சை எடுக்க மனசுந்தான் குருகுது.

பார்க்க வந்த எட்டுரு மாப்பிள்ளையும்- இந்த
கரிசல் மண்ணு முகம் பிடிக்கலைன்னு மறுத்துட்டான்.

என்ன செய்ய பெண்ணு நானு ?
கல்யாணம் பண்ணலேன்னா - இந்த
ஊரு தப்பா பேசுதய்யா.

ஆடுவோமே பள்ளு ரெண்டு
வேஷம் போடுவோமே வந்து நின்று
உடுத்திறப் பொய்க்காலு
என்றைக்குமே பொய்க்கவில்லை - மனிஷன்
கொடுத்த நாலு வாக்கு மட்டும் பொய்குதய்யா

கரிசல்காட்டு காரியின்னு
வேணாம்னு சொன்னவனெல்லாம்
படையெடுத்து வாரானே.
காசு நாலு பாத்த பிறகு.
பாவம் இந்த பச்சை மண்ணு
ஒப்பனையை கலைக்கலையே.

பொய்க்கால் குதிரைதான்
பொய்க்காம காக்குதய்யா
கண்ணி இவ வாழ்க்கையைத்தான்

கவிஞர் சி. வே. முத்துச்செழியன், மதுரை

# எழுந்து வாடா!



மலையக இளைஞனே
எழுந்து வாடா!
மண்ணின் மைந்தனே
எழுந்து வாடா!
***

உன்னையார் சொன்னார்
அடிமை என்று
உடனே அவனை
இழுத்து வாடா!
***

குழி தோண்டும்
கயவனைக் கொண்டு வாடா!
இங்கே குழியினில்
புதைப்போம் கொன்று தாடா!
உலையா வைக்கிறான் உயிருக்கவன் - இவன்
தலையினைத் திருகுவோம்
ஓடி வாடா!
***

வலையா விரிக்கிறான் வாழ்க்கைக்கவன் - தம்பி
நிலையா குலைகிறாய் நீயுமடா?
வீழ்ந்து கிடந்தது போதுமடா - அடேய் ஏழ்ந்து விரைந்து வா
விடிவுக்கடா!
***

தோள்தானே உன்னிரு
தூண்களடா - தம்பி
தூணதில் வெற்றியை
ஏற்ற வாடா!
கவ்வாத்தாய்க் கழுதைகள் தலையினைக்
கிழித்துப் போடு!
கலவரம் எல்லாமே
ஒழித்துப் போடு!
***

மலையக இளைஞனே
எழுந்து வாடா - இந்த
மண்ணின் மைந்தனே எழுந்து வாடா!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், (வெல்லபதியான்) கிழக்கிலங்கை

# சிறைச்சாலை மரணம்



மரணம் நேர்ந்து விட்டது
தூண்டல் துலங்களோடு
துடிதுடிக்க மரணம் நேர்ந்து விட்டது
குற்றவாளி யாரென கான
குடம் நிறைய குருதி தேவையோ!
குற்றம் செய்தவன் ஒப்பு கொள்ள
சதை கிழிய சாட்டையடி தேவையோ!
அதிகாரத்தில் உள்ளவர்கள்
ஆளாய் மதிக்கப்பட்டு அமர்ந்து பேச
அப்பாவி நாங்கள் மட்டும்
செருப்பாய் மிதிக்கப்பட்டு குப்பையில் வீச
எதுவும் இல்லாத ஏழை
நீதி காணாத கோழை
கண்ணீர் வடிய வடிய உயிரை கொடுக்க
கொடிய காவலர்கள் கண்டு சிரிக்க
சிறைச்சாலையும் சிறிது மௌனமாகிறது
கரை பிடித்த கம்பிகளும் கண்ணீர் வடிக்கிறது
இதுவே இறுதி சாவு
இனி நடக்காது இங்கு காவு என்னும்
ஒற்றை நம்பிக்கையில் நகர்கிறது நாட்கள்
இனியனும் இதுபோன்ற இறப்புக்கு
பூக்காமல் இருக்கட்டும் சில பூக்கள்.

கவிஞர் ஞா. மணிமாறன், இரெட்டியூர்

# அமைதி பேசும் போது



ஆழ்மனத்தின் எண்ணமெல்லாம்
அலையெனவே விரிந்திடலாம்.
அன்பின் நெறி படித்தே
அவசரத்தை தவிர்த்திடலாம்.
அடுத்தவர் மனநிலையை
அவர் வழியில் அறிந்திடலாம்
ஆகாயவெளிதன்னை
அளந்திடவே அவா எழலாம்.
அடுத்தென்ன நிலையெனவும்
அலையாத மனதோடு
அருமையாக உரையாடலாம்.
இதயத்தின் உயிர்த்துடிப்பை
எண்ணிடும் துல்லியத்தில்
ஏக்கத்தை புறம் தள்ளி
இளைக்காத கனவில் நிலைக்கலாம்.
தீவிரத்தின் வாதத்தில்
திடுக்கெனவே நுழையாமல்
ஆதரவாய் மொழி பேசும்
ஆனந்தத்தருணங்களை
அடைந்திடவே எண்ணிடலாம்.
மன உறக்கம் தொடராமல்
தினமெல்லாம் உழைப்பேற்றி
சோம்பலை வேரறுக்கும்
திருமந்திரம் ஓதிட உணரலாம்.
பிழைப்பாகப் பார்க்கா வாழ்வை
பிறர் நலம் பேணும் சிறப்பாக மாற்றிடவே
பணத்தின் பின்னால் ஓடா துணிவில்
பயணம் செல்லும் நபராக நிலைத்திடலாம்.
நிலையாமை நிலைபெறும் நகர்வினிலே
நித்தமும் சச்சரவைத் தேடும்
அழுக்காற்றைக் கழுவிடவே
அவகாசம் பிறந்திடலாம்.

பொய்யிலும் புரட்டிலும்
உழன்றிடும் அனுதினப்பாட்டைத்தாண்டி
வாய்மையின் வெளிச்சத்தில்
வாழ்வையே வரமாக்கலாம்.
கருவிகள் காட்டிய குழியில்
கண்மூடிப் புதைந்திடவே
பெருகிவரும் சந்தர்ப்பங்களில்
அறிவியலைத் தாண்டிய
அகத்தோடு அளவளாவி
அடையலாம் நிம்மதியை.

கவிஞர் இளையவன் சிவா

# முகவரியாய் மின்னிடுதே!

முழு வட்ட மஞ்சள் மதியே
முகிலோடு நீ ஆடிடும்
முதன்மை ஆட்டத்திலே
முதல்பரிசு பெறுவது யாரோ

முன்னாலே மறைந்தே
முன் நகர்ந்ததும் நகைக்கிறாயே
முழுத்திங்களில் பாதி நாளிலே
முறைமையோடு பணி செய்கிறாயே

முறுவலோடு பௌர்ணமியிலே
முகம் பார்த்திட இரவொளியாய்
முழித்துக்கொண்டு ஒளிர்கிறாயே
முத்தான உன் அமைதியிலே

முகாமிட்டு பல கதை பேச ஆசைதான்
முயன்று வென்ற போராட்டங்களில்
முன்னுதாரனமாக நீயும்தான்
முரணில்லா முழுஅழகே

முற்றுப்பெறா உன் செய்திகளிலே
முழுவதுமாக யாரிடம் கேட்பது?
முன்வைத்து கவியெழுத
முத்தமிழில் எழிலழகாய்

முழுவானிலே உன் நாட்களும்
முகவரியாய் மின்னிடுதே!



கவிஞர் நீலா சுபாஷ், ஆக்ஸ்ஃபர்

# பிழைத்துக் கிடந்தால் மீண்டும்

அஞ்சுதல் அஞ்சாமை பேதமை!
அஞ்சுதல் அஞ்சல் அறிவார் தொழில்!
ஏழில் ஒன்று குறை பிரசவம்!
அதில் எல்லாமே மனநலம் குன்றியது!

மனிதனின் ஆகச் சிறந்த கர்வம் ஆறாம் அறிவு!
கதிர்வீச்சால் வந்து விட்டது பேரழிவு!
விலங்குகளிருந்து உயர்வு எனும் பிம்பம்!
விரைவில் மறைந்து போகும் திண்ணம்!

அதிர்ச்சி அலை பரவக்கூடும்!
புள்ளி விவரங்கள் பயமுறுத்தும்!
எல்லாம் அலைபேசியால் வந்த வினை!
அளவுக்கு மீறிய விஞ்ஞானக் கொடை!

கண்ணை விற்று ஓவியம் வாங்குகிறோம்!
மண்ணை மலடாக்க இரசாயனம் இடுகிறோம்!
சுவாசத்தை நஞ்சாக்க புகை விடுகிறோம்!
கண்ணை குருடாக்க ஒளி பாய்ச்சுகிறோம்!

எல்லாம் அறுபது ஆண்டுகளுக்குள்!
ஆலகால விஷம் விதைத்தால்
அறுவடையில் அமுதா கிட்டும்?
விதைத்ததே முளைக்கும்!

இயந்திர மயமாக்கல்!
விஞ்ஞான மயமாக்கல்!
கணினி மயமாக்கல்!
கல்லறை மயமாக்கல்!



தவறுகளின்றி கற்காவிடில் புல் முளைக்கும்!
கருவறையில் பூகம்பம் வெடிக்கும்!
மனிதகுலம் இல்லாது போகும்!
மாண்டவர் மீள்வதில்லை!
மயானத்தில் யாரும் பிறப்பதில்லை!

அஞ்சுவது அஞ்ச ஆளிருக்காது!
மனிதன் இல்லா உலகில் மற்றவை வாழும்!
மற்றவை இல்லா உலகில் மனித இனம் வாழுமா?
பிழைத்துக் கிடந்தால் மீண்டும் பேசுவோம்!

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# வெண்புறாவின் ஏக்கம்

நிறம் பூசப்பட்ட
மனித மனங்களால்
நிகழ் காலம்
நித்தியமற்று அலைகிறது

அற்ப ஆசைகளுக்காய்
அகந்தையின் அவதாரங்கள்
அழகிய தேசங்களை
அழிக்கத் துணிகிறது

இளமைக் கனாக்கள்
நாற்காலியில் அமர்கிறது
இதயத்தில் இருண்ட
நினைவுச் சுருள்களோடு

தாயின் கருவறை
சுமக்கும் சிசுவுக்கு
தாலாட்டின் மாற்றீடாய்
குண்டுகளின் அதிர்வுகள்

கனவுகளிலே கல்லறைக்கு
சொந்தம் சொல்கிறது
உதிரம் உறைந்த
அவள் நாட்கள்

ஆழ்கடல் துளைக்கும்
ஆகாயம் கடக்கும்
ஆயுதத்தால் உரையாடும்
ஆச்சரியம் காண்கிறேன்

போரியல் கற்றுப்
போராடும் பாரிலே
போற்றிட எதுவுமில்லை
போரைத் தவிர



மாண்டு மடியும்
மானிட உயிர்கள்
மாசுகளோடு மண்ணில்
புதைந்து கொள்கிறது

அடர்ந்த கருமேகம்
சமாதான மழையை
படர்ந்த வையத்தில்
பொழிய மறுக்கின்றதோ

அமைதிப்புறா வெண்மை அணிந்து
கொடிதூக்கியபடி
அகிலமெங்கும் அமைதியின்
பரவல் வேண்டுமென

கவிஞர் சேஹு மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

# மௌனம் ஒரு மொழி



ஆர்ப்பரிக்கும் மனதிற்குள் உணர்வெனும் அகராதி
ஆழ்ந்த சிந்தனையில் கருத்தரிக்கப்படும் புதிராய்
நாவெனும் நடன மாது மௌனிக்கையில்
நாணமும் அடங்கிடும் மௌன மொழிக்குள்

புயலெனத் தோன்றிடும் வார்த்தைப் பொறிகளிடையே
புல்லராய் மௌனிக்கையில் அகம் அறிந்திடும்
தென்றலாய் வருடும் நிசப்தப் பொழுததில்
தெண்மைத் தீர்வின் கருத்தா அமைதியென

உணர்வுகளின் வெளிப்பாடு கதியற்று நிற்கையில்
உள்ளம் சொல்வதை விழிகளால் உரைத்திட
ஒலியற்ற ஊடகமாய் உதடுகளும் அசைந்திட
ஒப்புவமையற்ற மௌன மொழி சொல்லாடுதே

மானிட சமூகமென பல்மனம் படைத்த
மாற்று வர்க்கங்களிடையே தரப் பாகுபாட்டில்
புறக்கணிப்புகளை வலியுடன் சுமக்கும் மென்மனங்கள்
புன்னகைத்திடுதே இதழோரமாய் மௌன மொழிதனை

பிரிவைச் சுமக்கும் உள்ளம் நொறுங்கி
பிரியத்தை எண்ணி நினைவலைக்குள் மூழ்கி
இருட்டறைக்குள் தனியனாய் வலியில் துடிக்கையில்
இயலாமைக்குள் ஆறுதலென மௌனம் கதைபேசுமே

தனிமை தவிப்பென கையறுக்குள் சிறையாகி
தன்னிகரில்லா ஆசைகளை விருப்பமின்றி சிறையாக்கி
மௌனியாய் உடன்பாட்டிற்கு இயல்பாய் இசைவாகிட
மௌனம் ஒரு மொழியென நிச்சயமாயிற்று

கவிஞர் ஹாஸ்மியா தாஹா, தெக்கிராவ — கலாவெவ (இலங்கை)

# அவ்வளவு அழுக்காறா?

மின்கல அடுக்கு இல்லாத கடிகாரமா
எங்கள் கீழடி; அதன் கால முட்களை
உங்கள் அதிகார விருப்பத்திற்கேற்ப நகர்த்தி வைக்க.
கங்கணம் கட்டிக்கொண்டு திரிகிறீர்களே
ஆய்வறிக்கை திருத்தப்பட்டே ஆகவேண்டுமென்று.




கட்டுக்கதைகளாக அவிழ்த்துவிடப்பட இதுயென்ன
ராமர் கதையா ? புட்பக விமானக் கதையா ?
நாங்கள் என்ன வடவர்களா ?
தோற்றுப் போன அரசரின் கல்வெட்டை மாற்றி
வெற்றி பெற்றார் என்று எழுதி வைக்க.
தமிழ்நாடு என்ன இந்தியாவை விட்டுவிலகி
தனித்தா இருக்கிறது ?
தமிழின் பெருமை சொந்தமில்லையா
இந்தியாவிற்கு ?

அவ்வளவு அழுக்காறா நோபல் பரிசு பெற்ற
கரிமச் சோதனையின் மூலம்
கீழடியின் காலத்தைக் கிமு அறுநூறு என்று
பின்னுக்கிழுப்பதில் ?
அவ்வளவு அழுக்காறா அன்று இலக்கியத்திலும்
காப்பியத்திலும் பேசப்பட்டவை
இன்று அறிவியல் ஆதாரத்தோடு
அறிவிக்கப்படுவதில் ?

அவ்வளவு அழுக்காறா இல்லாத சரசுவதியைப் பற்றி
நீங்கள் பெருமையாகப் பேசுக் கொண்டிருக்கையிலே
நாங்கள் இருக்கின்ற தொன்மை நாகரிகத்தைக்
கண்டடைந்ததில் ?
அவ்வளவு அழுக்காறா
தமிழர்கள் தொன்மையானவர்களே
என்று உங்கள் உள்மனது ஒத்துக் கொள்வதில் ?

முன்னர்க் கொற்கைக்கு நிகழ்ந்த கொடுமைக்கும்
இன்று கீழடிக்கு நிகழ்வதற்கும்
பெரிதொன்றும் வேறுபாடுகள் இருப்பதாய்த் தெரியவில்லை.
குணக்கடலில் போய் ஒன்றிரண்டு முறை
குளித்துவிட்டு வாருங்கள்
அப்போதாவது தீருமா என்று பார்ப்போம்
உங்களது வயிற்றெரிச்சல் ?

கவிஞர் மதுரகவி, வண்டியூர் (மதுரை)

### தடுமாற்றம்

விழாமல் இருக்க
முயன்றது தவறோ?
விழுந்தபின்
எழுந்திருக்க தெரியாமல்
தடுமாறுகிறேனே.

### இதயம்



நொறுங்காத வரை
அழகிய கண்ணாடிதான்
உடைந்துவிட்டால்
ஒன்றுக்கும் உதவாத
குப்பை இது

### மனம்

மதம் கொண்ட
யானையும் வசமாகும்
மனம் கொண்ட
வேட்கை தணிவதேயில்லை

### கோழை

தவறு செய்ய கோழையிரு
துணிவு உனக்கு
தோழனாக
துணைவரும்

கவிஞர் பி. ரோஜாராணி, தேனி

# மொழிப்பழம்

அருசுவை ஊட்டும்
வேட்கை விழிப்பழம்
மெருகூட்டும்
மெழுகு பூசிய
மேனிப்பழம்
அருங் முக்கனியும்
அணிவகுக்கும்
முத்தமிழ்ப்பழம்
தரும் இன்பம்
தீஞ்சுவை தமிழ்ப்பழம்
விழிப்பழம் மொழிப்பழம்
சுவையோ சுவை தமிழ்ப்பழம்.

தமிழ்

கவிஞர் மதீரா(அறிவிப்பாளினி),இலங்கை

# அப்பா

வாழ்க்கையைக் கற்பிக்கும் ஆசான்!
அம்மாவின் அன்பு
கடல்அலை போல் வெளிப்படையானது!
அப்பாவின் அன்பு ஆழ்கடல் போன்றது!
அதன் ஆழம் யாரும் அறியாதது!

தன் மகன்(ள்)களைச் சுமப்பது மட்டுமின்றி
அவர்களது கனவினை சேர்த்து சுமக்கின்றார்!
நாம் உயரத்தை அடைய தன்னை
ஏணியாக்கிக் கொள்பவர் அப்பா!

நம் வாழ்க்கையை விருட்சமாக்க
தன்னை வேராக்கிக் கொள்பவர்!
ஆடம்பரத்தை விரும்பாதவர் எனினும்,
தன் குழந்தையுன் ஆசைகளுக்குத்
தடை போடுவதில்லை!

கண்ணுக்குத் தெரியாத
கடவுளைத் தேடுகிறோம்!
கண்முன்னே இருக்கும்
கடவுளை (தந்தையை) மறந்து!



கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

# மலைத் தீ

அதோ!
இருள் கவ்வத் துவங்கவிருக்கும்
இரு நாழிகைக்கு முன் அந்த
யானை நிறமொத்த ஆயிரமாயிரம்
மலை அடுக்குகளினும் உயர்ந்து
பள்ளத்தாக்கு குறைந்துப் புணர்ந்த
இருபெரும் பிரபஞ்ச மலைகளை
இலகுவாகக் கொளுத்திவிட்டு
கர்வமுற்ற அன்போடு அமர்கிறான்
அந்த அந்தி ஆதவன்;

மாய வானில் அந்த
மேகத் தீ அணைய
நிலவிளக்குகள் நெளிநெளிய
அடுக்கடுக்காய் அழகுகளை அந்திமுதல்
இரசித்து இன்புற்று மஞ்சத்தில்
நீலாம்பரி சாயலில் முனகியபடி
நிலவை மறந்து பலகோடிக்
காதலர் தம் மெய்யை மெய்மறந்து
நெருங்கி உரசி அலர்கையில் அதை
இரசித்தபடியே கோபித்து அந்த
மேகங்களுக்குள் மறைந்து எட்டிப் பார்த்து
மீண்டும் ஒளிந்துகொள்கிறாள் நிலவவள்;

எத்தனைப்பேர் காதலித்தும் அந்த
ஆதவனை மட்டுமே களைந்து உடுத்தி
உடுத்திக் களையும் தூய காதலின்
உலகளக்கும் உயர் சாட்சி நிலவேயன்றி
இந்த நிலத்தில் இல்லை எவரும்.



கவிஞர் தியானேசுவரன், வில்லிவாக்கம் (சென்னை)

# மழை நீ நிலம் நான்



அவளின் மனவோசை
கூட்டுக்குள் புதிதான
வரவொன்று
பூத்த முகச்சிவப்பில்
பொன்னார நிறமேந்தி
ஆசையுடன் ஒரு கவிதை

கற்பனை கூட்டத்தில்
நானில்லை
களவாடிய அவனிடம்
கேளேன் மனமே
வதைக்கும் பார்வையின்
வசனம் என்னவென்று

அந்த மவுனத்திலே
விளக்கேற்றி
மணமுடித்து விட்டேன்
தூரதேசம் போனாலும்

துரத்து அவனின் தேடலில்
துயில மறந்து கனாவிலே
கதைக்கிறேன்

மனத்திடலில் சத்தமின்றி
ஓர் யுத்தம்
விழிக்காதே விழியே
இரக்கமின்றி இருளை விலக்காதே
வாசல் தோரணத்தின் அசைவிலே
அவனின் ஆசைமுகம் கண்டேன்

வலது காலை எடுத்து வைக்கிறேன்
அவனின் கைக்கோர்த்து
கனவு பலித்தது
முடிவில்லாத காதல் முடியாத கனவே

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# ஒரு இனிய மாலை

வெய்யோனின் ஒளி கிரணங்கள்
காணாமல் போய்,
மஞ்சள் வெயிலின் மகிமையே
மயங்கும் மாலை பொழுதும் வந்தததே!
சுட்டெரிக்காத இளம் சூரிய கதிரே!
தெற்கே இருந்து தவழ்ந்த தென்றல் காற்றே!
ஜாதிமல்லியும், சம்பங்கியும், முல்லையும்
போட்டி போட்டே வாசனை தான் வீசுதே!
மூன்றாம் பிறையும் லேசாக
கண் சிமிட்டியபடியே வந்ததே!
கடற்கரை ஓரமே கடற்காற்றும்
சில்லென்று சாமரம் வீசியதே !
மணலின் சூடு தணிந்ததால்
நண்டுகள் சடுகுடு விளையாடினவே!
காதலர்கள் கண்களும் கவி பாடினவே!
குழந்தைகள் சிரிப்பொலியும்,
கடல் அலையின் ஓசையும்
போட்டிதான் போட்டனவே!
கலைஞர்களின் கைவண்ணமே
தூரிகையால் நெளிகிறதே!
கவி எழுத கவிஞர்கள் வந்தனரே!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# காதல் துளி



பனித்துகளின் மோதலில்
குளிராத என் உடல்
அவளின் பார்வையால்
குளிர்ந்து போகிறேன்

என் இளமையைக்
களவாடியப் பொழுதுகளில்
அவள் களவாடிப் போனது
என் இதயம்

அவளை மோதிவிட்டு
வந்த பட்டாம்பூச்சி
என்மீது மோதும் போது
அவளின் வாசத்தை உணர்கிறேன்

அவளின் அங்க அவயங்களை
வர்ணிக்கத் தெரியாது
அவளிடம் அன்பை மட்டும்
கண்டு வந்தவன்
நிலவின் பேரொளிக்கு
இவளும் ஒரு காரணம்
இவளின் முகவொளி படவே
நிலவும் மிகையாய் ஒளிர்ந்தது

மல்லிகையும் முல்லையும்
மலர்ந்து மணம் வீசியது
அவளின் தலையில்
சூடிய பின்பு.

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# உயிரே! நீ பிரியாதே !



கண்ணெதிரே தோன்றி,
கனிமுகம் காட்டி,
என்னுள் குடிபுகுந்து,
இதயத்தில் அமர்ந்தவளே!
என்னவள் நீயேயென்று
எனையுணரச் செய்தவளே!
தினம் காணத் துடித்து,
இரவெல்லாம் விழித்து
உன்னிடம் என்நிலையை
உரைத்திட்டபோதினிலே
என்நிலையும் அதுவன்றோ?
என்றுரைத்த என்னவளே!
துணையெனும் உறவுடனே
தோன்றினோம் இப்புவியில்!
இணைபிரியா வாழ்வதனை
ஏற்றிடும் வேளைதன்னில்
மனம்வருத்தும் சொல்லினை
மறந்தும் உரைக்காதே!
எத்தகு இடர்வரினும்
எதிர்கொள்வோம் துணிவுடனே!
மெச்சிடும் வகையினிலே
மேதினியில் வாழ்ந்திடுவோம்!
உன்னிடம் வேண்டுகிறேன்
உயிரே நீ பிரியாதே!

கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

# நாடு நம்ம நாடு



நாடு நம்ம நாடு பெருமையின் ஊரு
கலைகள் பல வளர்த்த புகழான ஊரு

இயல் இசை நாடகத்தின் மூலம் தமிழ் வளர்த்த நாடு
வாழ்வியலில் உயர்ந்த தமிழர் பண்பாடு

பொது மறையாம் திருக்குறளை உலகிற்கு தந்த நாடு
சித்தர்களும் ஞானிகளும் அருள் பாலித்த நாடு

ஆன்மிகத்தை உலகத்திற்கு உணர்த்திட்ட நாடு
அறிவியலின் மேன்மையோடு வான் அளந்த நாடு

பசிப்பிணி என்னும் நோய் நீக்கி அருட்பா என்னும்
அமுதம் தந்த வள்ளலார் என்னும் மகான் அவதரித்த ஊரு

அறுபத்து மூன்று நாயன்மார்களின் அருள் பெற்ற நாடு
ஆண்டவனுடன் கடந்திட்ட ஆழ்வார்கள் நாடு

அருளாளர்கள் பொருளாளர்கள் அன்பு வளர்த்த நாடு
கொடை உள்ளம் கொண்ட வள்ளல்கள் வாழ்ந்த நாடு

நாடு நம்ம நாடு பெருமையின் ஊரு
கலைகள் பல வளர்த்த புகழான ஊரு

கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# காதல் மொழி

சூரியனைப் பார்க்கும் போதுகூட
என் கண்கள் கூசவில்லை.
உன் அழகோ வலைக்குதடா
என் வெட்கம் என்னும் வானவில்லை.
உன் நிழலாக நடக்கும்பொது
நிமிர்ந்ததில்லை.
நீ எதிரே வந்தால்
என் இமைகளே இமைக்கவில்லை.
யாரிடமும் இதுவரை
நான் தோற்றதில்லை.
ஆனால்,என் பெண்மையோ
உன்னை வென்றதில்லை.
என் காதலை
உன்னிடம் வார்த்தையால் சொன்னதில்லை
என் செயல்களோ அதை மறைத்ததுமில்லை
யார் பேசியதும்
புரிந்ததில்லை
உன் மௌனம் புரியாமல்
இருந்ததில்லை.
இறுதியில் என்னவனுக்காக
என் இதயத்தின் வார்த்தையை
தூது அனுப்புகிறேன்
"என் வெட்கத்தில்"!



கவிஞர் சி. ராமேஸ்வரி, ஈரோடு

# தமிழா தலைநிமிர்

தமிழா!
அன்புக்கு அடிபணி!
அநியாயத்திற்கு அடிபணியாதே!
ஆர்வத்தை தமிழுக்கு அற்பணி - உன்
ஆணவத்தை அடியோடு நீக்கு நீ
இயல்பாக இரு நீ
இன்பமாக இருந்திடலாமே இனி
ஈட்டுவது மட்டுமேவா பணி
ஈகையுடனே பணியை கொஞ்சம் கவனி
உண்ணுவதற்காக மட்டுமே உழைக்காதே
உளநிறைவுக்காகவும் உழை
ஊக்கத்துடன் உழைத்தாலே - தம்
ஊரும் தலை நிமிரும் - தமிழா தலைநிமிர்

தமிழா!
என்றுமே சிறக்க வேண்டும் உமது பணி
எங்குமே கிடைத்திட வேண்டும் வெற்றி கனி
ஏற்றங்கள் பல பெற்றிடவே நீ
ஏங்கிடுமே எங்கள் இதயம் இனி
ஐம்பெருங் காப்பியங்களுமே - தமிழனின்
ஐந்து பெரும் வெற்றி கோப்பைகளே
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கினால் நமக்கு தாழ்வு
ஓங்குக தமிழனின் புகழ்!
ஓராங்குடனே தமிழா தலைநிமிர்
ஔவை வள்ளுவர் தமிழை பாரீர் - இனி
ஔதாரியாக தமிழா தலைநிமிர்




<u>வார்த்தை - பொருள்</u>

ஓராங்கு - ஒன்றுபோல், ஒருசேர .
ஔதாரியமாக - பெருந்தன்மையாக

கவிஞர் மு. கவிபாலன் (எ) மு. சோமசுந்தரம், சிதம்பரம்

# திசைகள் தொலைத்தவர்கள்

ஒவ்வொரு முறையும்
பிள்ளைகளின்
பள்ளி விடுமுறையில்
பிறந்த வீட்டு விஜயம்

என் வீடு திரும்பும் முறை
சமாதானப்படுத்துகிறேன்
பெற்றோரின் கண்ணீரை

மழலையர் பள்ளி
நினைவுக்கு வருகிறது
இப்போதைய அவர்களாய்
அப்போதைய நான்



யோசித்துப்பார்க்கிறேன்
நான்
முதிர்ச்சி பருவத்தை
அடைந்து விட்டேனா
என்று

இல்லை
புரிதல் என்னவென்றால்
அவர்கள்
மழலை பருவத்திற்கு
சென்று விட்டனர்
என்பதே

குழந்தைகளின்
காடுகளில்
வேண்டுமென்றே
திசைகள் தொலைத்தவர்கள்
இறுதிவரை
மீள்வதே இல்லை

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# கற்பனையில் உதித்த காதல்



போகின்ற போக்கினிலே எனது பார்வையில்
தீப ஒளிச் சுடராய் வந்து விழுந்தவளே!

உனதழகில் மயங்கி பித்தனாய்
சித்தம் தெளியாது தவிக்கிறேன் என்னைப் பாரடி

அழகே உன்னைக் கண்டிட
காதல் ஊற்றுமிங்கே பெருக்கெடுத்து ஓடுதடி!

உன் விழி எனை நோக்கிட ஏழேழு பிறவியும்
பிறப்பெடுத்திட ஆவலும் தோன்றுதடி!

உன் கரமென்னைத் தீண்டிட என்ன தவம் செய்தேனோ
எனும் எண்ணமும் வருகுதடி!

நமது திருமண வைபோகமதை எண்ணிட
தீஞ்சுவையாய் மனமும் உருகுதடி!

உன் மெல்லிய மலர் பாதத்தில் பூத்திட்ட
சிறு விரலுக்கு நானும் சொடக்கு எடுக்க வேண்டுமடி!

எனக்கு நீயும் உனக்கு நானுமாய்
உளம் உருக நிதர்சன காதலுடன் திளைத்திட வேண்டுமடி!

உன்சாயலில் பெண்பிள்ளை பெற்று
கொஞ்சிடத்தான் வேண்டுமடி!

கனவினிலும் கற்பனையிலும் கண்டிட்ட
தேவதை நீயும் நனவினில் எனக்காகவே வந்திட வேண்டுமடி!

கண்மூடி தவமிருக்கேன் தரிசனமதை தந்திடத்தான்
தங்கமே நீயும் வந்திடவே வேண்டுமடி!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# அமைதி பேசும்போது

மௌனமே
ஒரு மனிதனின் சிறந்த அறம்

மௌனமே
தனிமையின் சிறந்த ஊக்கம்

மௌனமே
சிறந்த அமைதியின் உடல் மொழி

மௌனமே
சிறந்த அமைதியின் உலகம்



கவிஞர் ம. செல்லமுத்து, பெரம்பலூர் மாவட்டம்

# நிம்மதி



உயிர்
நேரம்
வாய்ப்பு
இவற்றின்
வரிசையில்
இன்று நிம்மதி.

நிம்மதியின்
விலை ஏறிவிட்டது
பணக்காரனுக்கும் அது
கிடைப்பதில்லை.

கவிஞர் கோ. தனுசன்

# காளி நீயே சொல்

விரித்த சடையன்
ஊர்த்தவ காலன்
தெறிக்கும் டமருகம்
கதிரொளி சூலம்
கை அமை கனல்
பால் வெண்ணீருடன்
பாய் புனல் சிரம் தரித்தாய்!
நின் நீள் நயனம்
என் மேல் விழாமல்
ஏன் வேறெங்கோ?
நின்று கூத்தாடும்
காளி நீ
சொல்வாய்;
ஒரு சொல்; எனக்காக.
காரைக்கால் அம்மைக்கு
அரை நொடியில்
அருளி அமைந்த
என் கோ!
உன் கண் முன்
இறைஞ்சி நின்று
மன்றாடும் இவளுக்கும்
அருளென்றே.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# தனித்தன்மை

இயற்கை
தனித்தன்மையை
என்றும் விடுவதில்லை
ஆதலால் அது
காயப்படுவதேயில்லை !

காற்று
கரடுகளில்
முட்புதர்களில்
நதியின் மேனியில்
மலர்வனங்களில் புகுந்து
நாசிக்குள் வந்து
நுழைந்திடும் போதும்.

நீர்
பாறாங்கற்களில்
குண்டு குழிகளில்
தடித்த மரங்களில்
அணைகளில் புகுந்து
கைகளுக்கு வந்து
தவழ்ந்திடும் போதும்.

நிலவொளி
மேகங்களில்
மழைத்தூறல்களில்
அடர்வனத்தில்
கட்டடங்களில் புகுந்து
கண்களுக்கு
விருந்தாகும் போதும்.



தீ
எரிமலைகளில்
எரியும் புதர்களில்
வெப்பக்காற்றில்
அடுப்பினில் புகுந்து
சமையலறைக்கு வந்து
சேர்ந்திடும் போதும்.

இயற்கை
தனித்தன்மையை
என்றும் விடுவதில்லை
ஆதலால் அது
காயப்படுவதேயில்லை !

கவிஞர் இளங்கோவன் மணியன்

தமிழ் நிலத்தை இறுகப்பற்ற
தென்னவன் தாழ் தொழும் கூளி.
தமிழ் உறையும் மாமூதூரில்
சேயோன் உலா சொல்லி
திரளும் காலன் படை.

முந்து பகை வெல்ல
முந்நீர் முருகு முன்றில்
முதுமக்கள் கூடல்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

### அதுமட்டும்

செலவழிக்க
'பணம்' வேண்டும்
பேசிக்கொண்டிருக்க
'மனிதர்' வேண்டும்

உவகைக்கு
'காரணம்' வேண்டும்
சோகத்திற்கு
'நிகழ்வு' வேண்டும்
ரசிப்பதற்கு
'இசை' வேண்டும்

ஆனால்
இலவசமாய் 'சிந்தனை'

என்ன ஒன்று
'நல்லவிதமாய்'
இருக்க வேண்டும்.

*****

### அதுமட்டுமில்லை

நமக்கு பிடித்ததை
பிடிக்கும்
விருப்பமில்லாவற்றை
விருப்பவில்லை



ரசிப்பதை ரசிப்பதாயும்
அமைதி காக்கும்
தருணங்களில் அமைதியாயும்

பேசவேண்டிய கணத்தில்
பேசுவதாயும்
பிரமிப்பு நேரத்தில்
பிரமிப்பதாயும்

மற்றவரும்
சொல்லும் நேரத்தில்
ஒரே அலைவரிசை
சிந்தனை என்ற
உவகையையும் தாண்டி

நாம் சரி என்று கொடுக்கும்
நம்பிக்கையும் தான்

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

# மனசெல்லாம் நிறைந்தாயே!



அத்தபெத்த வனப்புச் செந்தாமரையே
ஓ நினைப்பில் நானுமிங்கு இருக்கின்றேன்
இந்த ராசாவை ஓரக்கண்ணாலப் பாத்தபடி
வேகமாய் போறியே நில்லுடா நானும்வாரேன்

பயப்படாதே நானும் உன் ஒறவுக்காரப் பெண்னே
மனசெல்லாம் நீதானே பூரணமா இருந்திருக்கின்றாய்
நல்லத்தூக்கம் போனதே மாமன் ஓநெனப்பால
மல்லிகைப்பூ புன்னகையிலே என்னைக் கவிழ்த்தாயே

மணக்கும் பூவே நானும் சொக்கினேன் உன்னிடத்தில்
குறிஞ்சிப்பூபோல அசத்தலாத்தான் நீயுமிருக்கே
ரோசாப்பூ மேனிக்காரி வட்டகுங்குமம் வச்சவளே
மகிழம்பூ வாசத்துல மாமன் உன்னைத் தொடர்ந்தேனடி

மோகம் கொண்டேனடி மயக்கம்தானே வந்ததடி
ஓடுவதை நிறுத்தடி என்னோட நீயும் நடப்பாயடி

இதயம் பறித்தவளே அருகினில் வந்திடுவாயா
நெஞ்சுக் கூட்டில் ஓநெனப்புதான் தினமும் வந்ததடி

அருமை மாமனிங்கே உனக்காகவே இருக்கேனடி
அந்தியும்தான் வந்ததடி ஓ நெனப்பும் கொல்லுதடி
காதலை ஏற்றிடுவாய், பொஞ்சாதியாய் வந்திடுவாய்
உண்மையை சொல்லிட்டேன் மனசெல்லாம் நீயே.

கவிஞர் இரா. சீ. பாலகுமார், சந்தோசபுரம் (சென்னை)

டைனோசர் மாமா
கிரீம் பிஸ்கட் அங்கிள்
ரிமோட் கார் சித்தப்பா
வாங்கி வந்த பொருட்களை வைத்து
அடையாளம் சொல்லும் குழந்தைகள்
***

மறந்ததை நினைத்து
வருத்தப்படாத
மறதி வேண்டும்
***

கை முடமானவன் கைக்காக
கை கூப்பாமல்
வேண்டினான் கடவுளை
***

காதுகுடம்பியும்
கண் சொருவலும்
சுவர்க்கம்
***

இரு கையிலும் பொருள் இருந்தால்
ஒன்றை கீழே போட்டுவிட்டு
அடுத்ததை வாங்கும் குழந்தை போன்றோர்
மனம் வேண்டும்
***

அனைத்திற்கும் ஒரு எல்லையுண்டு என்பவர்
அதனை , தள்ளி கொண்டே போவர்.
அன்பு தான் வேறென்ன.
***

அம்மா சமயலறை
மருந்தகம்.
***

அரசாங்கமே
கட்சி படம் ஒட்டிய வாகனங்களுக்கு
தனி சாலை அமையுங்கள்
அனைவரையும் தள்ளிவிட்டு செல்கின்றனர்
***



காது கேளாதோருக்கான பாடல்
ஒன்றுள்ளது
அது காற்றில் கரைந்துவிட்டது
***

அதே வர்ணத்தில்
மாதுளை முத்துக்களை வரைந்து தாருங்கள்
ரசிக்க நினைத்தால்
இரண்டு நாட்களில் அழுகி விடுகிறது

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

திலக்கும், அரசும் அந்த மஹாராஷ்டிரா தொழிற்சாலைகளுக்கு உதவி செய்யும் அலுவலகத்திலிருந்து கொஞ்சம் தளர்ச்சியோடு இறங்கி வந்தனர்.



"இவ்வளவு பணம் லஞ்சமாக கேட்பான் என்று எதிர்பார்க்கவில்லை. ஆனால் என் தந்தையாக இருந்தால் ஒரு வேளை கொடுக்க வேண்டியதைக் கொடுத்து, பெற வேண்டியதைப் பெற வேண்டும் என்ற கோணத்தில் செயல்பட்டிருப்பார். இவ்வளவு பணம் லஞ்சமாக கொடுப்பதிருக்கட்டும் முதலில் வியாபாரம் செய்யத் தொடங்குமுன்னே லஞ்சம் கொடுத்து லோன் வாங்கி, கட்டிடம் போட்டு ம்கூம்... திலக். சரி வரும் என்று தோன்ற வில்லை." என்றான் அரசு.

"அரசு நீ ஓடுகிற குதிரை. உனக்கு கடிவாளம் போட்டு கண்களை இருபுறமும் மறைத்து நேரே பார்க்க ஓட விட்டிருக்கிறது. இந்த வாழ்க்கை.! இப்போது உன் குறிக்கோள் சுய சம்பாத்தியம், அதற்காக சில நிப்பந்தங்களுக்குக்கட்டுப் பட்டுத்தான் ஆகவேண்டும்."

"உனக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஒன்றைப் பெறுவதற்கு ஒன்ற இழந்துதான் இழந்துதான் தீர வேண்டும். இது வாழ்வின் விதி. அந்த விதியை மீற முடியாத சூழ்நிலை. நீ செய்யப் போகும் வியாபாரத்திற்கு இந்த லஞ்சம் முதலீடாக இருக்கட்டும்." என்றான் திலக்.

"சரி சொல்லி விடலாம் என்கிறாயா?" என்று கேட்டான் அரசு. "ஆம்" என்று தலையாட்டினான் திலக்.
திரும்ப வேக வேகமாக மாடியேறி வந்து "லோன் சாங்ஷன் செய்து விடு" என்றான் அந்த எம்.ஐ.டி.சி. கிளார்க்கிடம். அவன் கொஞ்சம் கூட கூசாமல் "என் பணம் ..." என்று கேட்டான்.

"எனக்கு லோன் வந்து சேர்ந்த மறுநிமிடம்..", "ஏமாற்ற மாட்டாயே?", "கண்டிப்பாக என் வாழ்வில் யாரையும் ஏமாற்றியதில்லை."

"சரி. நாளைக்கு காலையில் உன் வங்கி கணக்கு எண் கொண்டு வா. அங்கே எங்கள் செக் போய் விடும்." என்றான் கிளார்க். கீழே இறங்கி வந்து "தாங்க்யூ திலக். நான் கொஞ்சம் கொஞ்சமாக இனி சமாளித்துக் கொள்கிறேன். நீ காந்திவிலி போக வேண்டுமென்றாயே... இனி கிளம்பு" என்றான். "வெரிகுட், அரசு. உனக்கு இவ்வளவு தன்னம்பிக்கை வந்து குறித்து மிக்க சந்தோசம்."

"இந்தக் கட்டிடம் வளர ஆரம்பிக்கும்போதே நான் பெங்களூர் போய் மெஷினரிக்கு ஆர்டர் கொடுத்து விட்டு வரலாமென்று நினைக்கிறேன்."

"சொல்லாதே, செய். மேலும் இந்தியன் மெஷினரிக்கு இணையாக ஜப்பான் கம்பெனியொன்று போட்டி போட்டு இந்தியாவில் பாதி விலைக்கு மார்க்கெட்டிற்கு வந்துள்ளது. அதையும் கவனி."

ஜப்பான் மெஷினுக்கு கஷ்டம்ஸ் டியூட்டி, ஆக்ட்ராய் எல்லாம் கட்டும்போது அதிமாகத்தானிருக்கும் திலக்."

"நோ அரசு. எல்லா டியூட்டி, வரி எல்லாம் சேர்த்து குறைந்த விலைக்குத் தருகிறான்."

"அப்புறம் அந்த எக்ஸ் போர்ட் ஆர்டர் என்னாயிற்று எல்.சி. ஓப்பன் பண்ணியாகி விட்டதா? திலக் ஞாபகம் திரும்ப நினைவுக்குக் கொண்டுவந்தான்.

"ம் கூம். ஒரு மாதமிருக்கிறது. உன்னிடமும் உன் தங்கையிடமும் வருகின்ற புரொடக்ஷன் போக மீதி வெளியே வாங்க வேண்டியதற்கு ஆர்டர் கொடுத்தாகி விட்டது."

"இன்னும் கம்பெனிக்கு பெயர், முகவரி, பேங்க் அக்கவுண்ட் எதுவுமே இல்லாததால் ஒரு வாரத்திற்குள் எல்லாம் ஆரேஞ்ச் பண்ணி இ .. மெயில் அனுப்புகிறேன். போனுக்கே நாலாயிரத்து நானூற்றுக்கு மேலாகி விட்டது."

"சரி விடு. சம்பாதிக்கிற பணம் தானே. உடனடியாக பெயர்.... வைத்து... ஆமாம் என்ன பெயர் வைக்கலாம் என்று ஆசைப் படுகிறாய்?"

"எனக்கு உதவி செய்த திலக் ஞாபகமாக 'திலகர் எக்ஸ்போர்ட் ஏஜென்ஸி' என்று நினைத்துள்ளேன்."

"நோ.நோ.. அது தவறு. உன் அம்மா பெயர் வைக்கலாமே. அவர்கள் பெயர் என்ன?", "ராணி", "ராணி எக்ஸ்போர்ட்ஸ்' என்று பெயர் சூட்டலாம்" என்று திலக் சொன்னதற்கு ஆமோதித்தான் அரசு.



தொடரும்...

கவிஞர் இராஜகை நிலவன்

# பரிதிமாற் கலைஞர்

## கட்டுரை

### சிறப்பு



(சூலை 6, 1870 - நவம்பர் 2, 1903) ஒரு தமிழறிஞரும், நூலாசிரியரும், தனித்தமிழ் இயக்கத்தில் முதன்மையான பங்கு வகித்தவர்களில் ஒருவரும் ஆவார். இவர் உயரிய செந்தமிழ் நடையில் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவர். நாடகப் புலமை சான்றவர். 'தமிழ் மொழி வரலாறு' போன்ற ஆய்வு நூல்களையும், கலாவதி, ரூபாவதி போன்ற நாடக நூல்களையும், நாடக இலக்கணமான நாடகவியலையும் இயற்றியவர்.

சூரியநாராயண சாஸ்திரியர் என்று அழைக்கப்பட்ட இவர், தமிழ் மேல் கொண்ட பற்றினால் தனது பெயரை வடமொழி கலக்காத தூய தமிழில் பரிதிமாற் கலைஞர் என்று மாற்றிக்கொண்டார்.

### வாழ்க்கைக் குறிப்பு

பரிதிமாற் கலைஞர் எனப்படும் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள் மதுரை அருகே விளாச்சேரி ஊராட்சி என்னும் ஊரில் கோவிந்த சிவன், இலட்சுமி அம்மாள் தம்பதியர்க்கு மகனாக பிறந்தார். வடமொழியை தந்தையாரிடமும், தமிழை மதுரை சபாபதி முதலியாரிடமும் கற்றார். இளவயது முதலே தமிழ் மொழியின் மீதும், இலக்கணத்தின் மீதும், இலக்கியத்தின் மீதும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தவர் பின்னாளில் இளங்கலை பட்டப்படிப்பில் தமிழ்மொழியிலும், மெய்யியலிலும் மாநிலத்திலேயே முதலாவதாகத் தேறினார். தமிழ்மொழியின் வரலாறு மற்றும் நாடகவியல் (நாடகங்களுக்கான இலக்கணம்) உட்பட பல நூல்களை எழுதினார். கலாவதி (1898), ரூபாவதி என்ற நாடக நூல்களை எழுதி தாமே கலாவதி, ரூபாவதி எனும் பெண் பாத்திரங்களில் நடித்தார்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்


## வாழ்க்கைக் குறிப்பு

இராவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களால் திராவிட சாஸ்திரி எனச் சிறப்பிக்கப்பட்டார். இது தவிர வடமொழியற்ற நல்ல தமிழ்மொழி வேண்டும் என்பதில் பெரும் முனைப்பு காட்டினார்.

## இவரது நூல்கள்

தமிழக அரசு இவரது மரபுரிமையாளர் 19 பேருக்கு ரூபாய் 15 லட்சம் பரிவுத் தொகையாக அளித்து இவரது பதின்மூன்று நூல்களும் 2006 திசம்பர் 2 அன்று தமிழக அரசால் அரசுடமையாக்கப்பட்டன. பரிதிமாற் கலைஞர் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்க நூல்கள் பின்வருமாறு:

- ரூபாவதி
- கலாவதி
- மான விஜயம்
- தனிப்பாசுரத் தொகை
- பாவலர் விருந்து
- மதிவாணன்
- நாடகவியல்
- தமிழ் வியாசங்கள்
- தமிழ் மொழியின் வரலாறு
- சித்திரக்கவி விளக்கம்
- சூர்ப்ப நகை - புராண நாடகம்




## பதிப்பித்த நூல்கள்

- சயம்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி (1898)
- மகாலிங்கையர் எழுதிய இலக்கணச்சுருக்கம் (1898)
- புகழேந்திப்புலவரின் நளவெண்பா (1899)

திரு அ. வில்சன், இதழாசிரியர்

### பதிப்பித்த நூல்கள்

- **சயம்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி (1898)**
- **மகாலிங்கையர் எழுதிய இலக்கணச்சுருக்கம் (1898)**
- **புகழேந்திப்புலவரின் நளவெண்பா (1899)**
- **உத்தரகோச மங்கை மங்களேசுவரி பிள்ளைத்தமிழ் (1901)**
- **தனிப்பாசுரத்தொகை (1901)**

### பரிதிமாற்கலைஞரின் மறைவு

**நவம்பர் 2, 1903-இல் பரிதிமாற் கலைஞர் 33 ஆண்டுகளே வாழ்ந்து மறைந்தார்.**



திரு அ. வில்சன், இதழாசிரியர்

நாளை

# நமதே

## ஒரு தோல்வியிலிருந்து
## கற்றுக்கொண்டால்
## அந்த தோல்வியும்
## வெற்றிதான்

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்பிற்கு :

9597887847
8870884969

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com